# பெப்ரவரி – 06 – புதன்

## புனித கொன்சாலோ கார்சியா

**என் உயிரே! ஆண்டவரைப் போற்றிடு! என் முழு உள்ளமே! அவரது திருப்பெயரை ஏற்றிடு! திபா. 103:1**

**முதல் வாசகம் : ஏபிரேயர் 12 : 4 – 7, 11 – 15**

சகோதர, சகோதரிகளே! பாவத்திற்கு எதிரான போராட்டத்தில், இரத்தம் சிந்தும் அளவுக்கு நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லை. தம் பிள்ளைகளிடம் பேசுவதுபோல் இறைவன் உங்களுக்குத் தந்த பின்வரும் அறிவுரையை நீங்கள் மறந்து விட்டீர்கள் ”பிள்ளாய், ஆண்டவர் உன்னைக் கண்டித்துத் திருத்துவதை வேண்டாம் எனத் தள்ளிவிடாதே. அவர் கண்டிக்கும் போது தளர்ந்து போகாதே.” ”தந்தை தாம் ஏற்றுக்கொண்ட மக்களைத் தண்டிக்கிறார் ஆண்டவர் தாம் யாரிடம் அன்பு கொண்டிருக்கிறாரோ அவர்களைக் கண்டிக்கிறார்.” திருத்தப் படுவதற்காகத் துன்பங்களைத் தாங்கிக் கொள்ளுங்கள். கடவுள் உங்களைத் தம் பிள்ளைகளாக நடத்துகிறார். தந்தை தண்டித்துத் திருத்தாத பிள்ளை உண்டோ? இவ்வாறு திருத்தப்படுவது இப்போது மகிழ்ச்சிக்குரியதாய் இராமல், துயரத்துக்குரியதாகவே தோன்றும். ஆனால் பின்னர், இவ்வாறு பயிற்சி பெற்றவர்கள் அமைதியையும் நேர்மையான வாழ்வையும் பயனாகப் பெறுவர். எனவே, ”தளர்ந்துபோன கைகளைத் திடப்படுத்துங்கள், தள்ளாடும் முழங்கால்களை உறுதிப் படுத்துங்கள்.” ”நீங்கள் நேர்மையான பாதையில் நடந்து செல்லுங்கள். ”அப்போதுதான் ஊனமாய்ப் போன கால்மூட்டு பிசகாமல் குணமடையும். ‘அனைவருடனும் அமைதியாய் இருக்க முயலுங்கள் தூய்மையை நாடுங்கள். தூய்மையின்றி எவரும் ஆண்டவரைக் காணமாட்டார். உங்களுள் எவரும் கடவுளின் அருளை இழந்துவிடாமலிருக்கப் பார்த்துக்கொள்ளுங்கள். கசப்பான நச்சுவேர் எதுவும் உங்களுக்குள் முளைத்து, தொல்லை கொடுக்காதபடியும் அதனால் பலர் கெட்டுப்போகாதபடியும் பார்த்துக் கொள்ளுங்கள்.

**பதில்பாடல் :** ஆண்டவருக்கு அஞ்சுவோர் மீது அவரது பேரன்பு நிலைத்திருக்கும்.

**நற்செய்தி : மாற்கு 6 : 1 – 6**

அக்காலத்தில் இயேசு தமது சொந்த ஊருக்கு வந்தார். அவருடைய சீடரும் அவரைப் பின் தொடர்ந்தனர். ஓய்வுநாள் வந்தபோது அவர் தொழுகைக்கூடத்தில் கற்பிக்கத் தொடங்கினார். அதைக் கேட்ட பலர் வியப்பில் ஆழ்ந்தனர். அவர்கள், ”இவருக்கு இவையெல்லாம் எங்கிருந்து வந்தன? என்னே இவருக்கு அருளப்பட்டுள்ள ஞானம்! என்னே இவருடைய கைகளால் ஆகும் வல்ல செயல்கள்! இவர் தச்சர் அல்லவா! மரியாவின் மகன்தானே! யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் ஆகியோர் இவருடைய சகோதரர் அல்லவா? இவர் சகோதரிகள் இங்கு நம்மோடு இருக்கிறார்கள் அல்லவா?” என்றார்கள். இவ்வாறு அவரை ஏற்றுக் கொள்ள அவர்கள் தயங்கினார்கள். இயேசு அவர்களிடம், ”சொந்த ஊரிலும் சுற்றத்திலும் தம் வீட்டிலும் தவிர மற்றெங்கும் இறைவாக்கினர் மதிப்புப் பெறுவர்” என்றார். அங்கே உடல் நலமற்றோர் சிலர்மேல் கைகளை வைத்துக் குணமாக்கியதைத் தவிர வேறு வல்லசெயல் எதையும் அவரால் செய்ய இயலவில்லை. அவர்களது நம்பிக்கையின்மையைக் கண்டு அவர் வியப்புற்றார். அவர் சுற்றிலுமுள்ள ஊர்களுக்குச் சென்று கற்பித்துவந்தார்.

**தியானம்:** இன்றைய இறைவார்த்தைப் பகுதிகள் இறைவன் எம்மேல் கொண்டுள்ள அன்பின் வெளிப்படுதலையும், அவ்வன்பிலிருந்து விலகிப்போகின்றவர்களை கண்டிப்பார், தண்டனை தருவார் என்பதை எமக்கு தெளிவுபடுத்துகின்றது. அவர் எம்மைத் தம் பிள்ளைகள் என்ற உரிமையினாலே கடிந்துகொள்கின்றார் என்பதை நாங்கள் மறந்துவிடக் கூடாது. “தந்தை தாம் ஏற்றுக்கொண்ட மக்களைத் தண்டிக்கின்றார், ஆண்டவர் தாம் யாரிடம் அன்பு கொண்டிருக்கின்றாரோ அவர்களை கடிந்து கொள்ளின்றார்”. (எபி.12:4) இன்று நாங்கள் அவர் கண்டிப்பினை, தண்டனையை ஏற்றுக்கொள்ள தயாராக உள்ளோமா? எங்களைக் கேட்க வேண்டிய கோள்வியாகும். ஏனென்றால் அவ்வாறான கண்டிப்பு, தண்டனை என்பது போல் தோன்றும். அப்போது தளர்ந்து விடுகின்றோம் சோர்ந்போய் விடுகின்றோம். கோவிலுக்கு தினமும் செல்கின்றேன், வழிபாடுகளில் நான் பங்கு பற்றுகின்றேன், செபமாலை சொல்கின்றேன் எனக்குத்தான் மீண்டும் சோதனை வருகின்றது என்று கடவுள்மேல் பழி போட்டுவிடுகின்றோம். ஆனால் கடவுள் தண்டனை தருபவரல்ல எம்மைத் திருத்துவதற்காக ஒரு சிலவற்றை வெளிப்படுத்துகின்றார். இதன் மூலமாக நாங்கள் விளங்க வேண்டியது எவ்வேளையிலும் கடவுளோடு இணைந்திருக்க வேண்டும். நற்செய்தி வாசகத்திலும் இயேசு எவ்வாறான அற்புதமான செயல்கள் செய்திருந்தாலும், தன்னைத் தேடி வந்தவர்களுக்கு அனைத்தையும் கொடுத்திருந்தும் சில சந்தர்ப்பங்கில் அவரை ஏற்றுக்கொள்ள மறுத்துவிடுகின்றார்கள். “சொந்த ஊரிலும் சுற்றுப்புறத்திலும்.......ஏற்றுக்கொள்ள மறுக்கிறார்கள்” (மாற்.6:4) அவ்வாறு கூறுவதைப் பார்க்கின்றோம். எனவே இவ்வாறான வாழ்க்கை நாம் வாழாமல் எமது வாழ்வை நாங்கள் மாற்றியமைக்க வேண்டும். அவர் எமக்கு செய்த அனைத்திற்குமாக யாவும் எமக்கு நன்மைக்கே செய்கிறார் என்று ஏற்றுக்கொண்டு அதை உணர்ந்தவர்களாக விசுவாச வாழ்வு வாழ்வோம்.